திரு. ஜே. ஜேம்ஸ் : இப்போது அரிசியை அரசாங்கம் விநியோகம் செய்வதுபோல் சாதாரணமாக மற்ற உணவுப் பண்டங்களையும் அவைகளின் விலைகள் திடீர் திடீரென்று ஏறிப் போகின்ற காரணத்தினுல், வாங்கி அவற்றின் விலைகளைக் கண்டிரோல் செய்து அரசாங்கமே அவற்றையும் விநியோகம் செய்வதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : விலைவாசி ஏறுகிறது, விலைவாசி ஏறுகிறது என்று சொல்வது வாடிக்கையாகிவிட்டது. விலைவாசிகள் இப்போது குறைந்துக் கொண்டிருக்கிற நிலையில் உறுப்பினர்கள் இப்படிச் சொல்லக்கூடாது. விலைகள் ஏருமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும். வணிகக் கழகம் மூலம் பொருள்களை வாங்கி வைத்து விற்க வசதியாக இருக்கும்.

* 582 விஞ—திரு. சி. மணலி கந்தசாமி : மாண்புமிகு உணவு—வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

உணவு தானிய வர்த்தகத்தை அரசு மேற்கொண்டு கூட்டுறவு அமைப்புகளின் மூலம் விநியோகிக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அத்தகைய செயற் குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்ய விருப்பமாயிருந்து, அவை திறம்படச் செயலாற்றுமானுல், இயங்கக் கூடிய நேர்வுகளில், அரசு மேற்கொள்கின்ற அளவுக்குக் கொள்முதல், பங்கீட்டுப் பணிகளைச் செய்ய கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திரு. ஆ. கு. சுப்பையா : கிராமங்களில் விவசாயிகள் உற்பத்தி செய்யக் கூடிய உணவுப்பொருள்களுக்கு நியாயவிலை நிர்ணயம் செய்து சிவில் சப்ளைஸ் இலாகா மூலமாகவாவது விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அரசாங்கம் நெல் போன்ற பொருள்களுக்கு குறைந்தபட்ச விலையை நிர்ணயித்திருக்கிறது. வெளிச் சந்தையில் வாங்க ஏற்பாடு செய்திருக்கிருேம். இதனுல் விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அதே நேரத்தில் வாங்கிய பொருள்களை மீண்டும் வழங்குவதற்கு இந்தக் கார்ப்பரேஷன் மூலம் திரும்ப வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

1972 மார்ச் 20]

திரு. சோ. அழகர்சாமி: விவசாயிகளிடம் கொள்முதல் செய்வதாகவும், விலை நிர்ணயம் செய்திருப்பதாகவும் கூறினார்கள். விவசாயிகளிடம் கொள்முதல் செய்கிற விலைக்கும் மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய விலைக்கும் இடைவெளி மிகவும் அதிகமாக இருக்கிறது. உணவுத் தானியங்கள் பூராவையும் அவை மார்க்கெட்டுக்கு வரும்போதே அரசாங்கமே அவற்றையெல்லாம் வாங்கி கொஞ்சம் லாபம் வைத்து மக்களுக்கு விநியோகம் செய்யக்கூடிய ஒரு ஏற்பாட்டினைச் செய்தால் மக்களுக்கு உணவு தானியங்கள் மலிவான விலைக்கு கிடைப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே மார்க்கெட்டுக்கு வரும் எல்லா உணவு தானியங்களையும் அரசாங்கமே கொள்முதல் செய்து நியாயமான விலைக்கு அவை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நாம் துவக்கியிருக்கிற கார்ப்பரேஷன் கொள்கை அதுதான். அறுவடைக் காலங்களில் அதை வாங்கிவைத்து—லாபம் வைத்தல்ல—லாப நஷ்டமில்லாத முறையில் அரசாங்கம் விநியோகிக்க ஏற்பாடு செய்கிறோம். இது துவக்க காலமாதலால் வெளிச் சந்தையில் இப்போது நெல் மட்டும் வாங்குவது என்று முடிவு எடுத்திருக்கிறோம். தொடர்ந்து வரக் கூடிய காலங்களில் இதை விரிவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. இ. ராமசாமி: வால்பாறைத் தேயிலைத் தோட்டங்களில் உள்ள தொழிலாளர்கள் அரிசியை தனிப்பட்ட நபர்களிடமிருந்து தான் வாங்கவேண்டியிருக்கிறது. ஆகவே, விற்கப்படும் விலை சற்று ஏற்றமாகயிருக்கிறது. அதைக் கட்டுப்படுத்த கூட்டுறவு ஸ்டோர் மூலமாக அரிசி சப்ளை செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தமிழ்நாடு எல்லையோரத்தில் உள்ள இடங்களில் எல்லாம் ஐந்து மைல் பெல்ட் ஏரியாவிற்கு உட்பட்ட இடங்களில் எல்லாம் பங்கீட்டுக் கார்ட் மூலம் அரிசி விநியோகிக்கப்படும். அங்கெல்லாம் அரிசி விநியோகம் நிர்ணயம் செய்வது என்பது மாவட்ட ஆட்சி மன்றத் தலைவருக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. அவரது அனுமதி பேரில் நிர்ணயம் செய்யப் படுவதால் இப்படிப்பட்ட தவறான காரியங்கள் இனிமேல் நடக்காது என்று நான் நம்புகிறேன்.

திரு. கா. காளிமுத்து: உணவு தானிய வர்த்தகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று தேசீய அபிவிருத்திக் குழுவில் ஏதாவது ஆலோசனை செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்திற்குச் செல்கிறவர்கள் முதல் அமைச்சர் அவர்கள். அவரைத்தான் கேட்கவேண்டும். அப்படி ஒன்றும் இந்த அரசுக்குத் தகவல் இல்லை. அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டுமென்ற கொள்கை முழு அளவிற்கு இப்போது ஏற்றுக்கொள்ளவில்லை.

Quarters for staff of Industrial Training Centres.

* 583 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Industries be pleased to state whether it is a fact that there are no adequate quarters for the staff in Industrial Training Centres?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை. தமிழ் நாட்டில் உள்ள 31 தொழிற்பயிற்சி நிலையங்களில் 22 நிலையங்களில் பணியாற்றுவோருக்கு குடியிருப்புகள் கட்டித் தரப்பட்டுள்ளன. கிண்டி மற்றும் வட சென்னையில் உள்ள நிலையங்கட்கும், சென்னை மகளிர் தொழிற்பயிற்சி நிறுவனத்திற்கும் சென்னை நகர் எல்லைக்குள் உள்ள படியால் தனியே குடியிருப்புகள் கட்ட வேண்டுவதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 6 நிலையங்கட்கு ஊழியர் குடியிருப்புகள் கட்டும் யோசனை நிதி நிலைமை இடங்கொடுக்கும் பொழுது எடுத்துக்கொள்ளப்படும்.

வேலை வாய்ப்பின்மை குறித்த வல்லுநர் குழு

*584 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

தமிழ் நாட்டில் உள்ள வேலைவாய்ப்பு நிலைமைகளை ஆராய்ந்து ஆவன செய்ய நிபுணர் குழு ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வேலைவாய்ப்பின்மை குறித்த ஆய்வு செய்ய வல்லுநர் குழு ஒன்றைத் தொழிலாளர் நலத் துறையின் 17—9—71 நாளிட்ட 1175-ஆம் எண் ஆணையில் அரசு அமைத்துள்ளது. மேற்படி ஆணையின் நகல் @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 154–157-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.